பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
17 11 2024 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. அரசுமுறைப் பயணமாக நைஜீரியா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அந்நாட்டு அதிபருடன் பேச்சு நடத்துகிறார்.

2. விண்வெளித்துறையில் இந்தியா பல்வேறு சாதனைகளைப் படைத்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. மக்கள் நலனில் அக்கறையின்றி காங்கிரஸ் செயல்பட்டு வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. **Suriname** நாட்டுக்கு 475 மெட்ரிக் டன் உணவுப் பொருட்களை இந்தியா அனுப்பியுள்ளது.

5. ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நைஜீரிய சென்றடைந்தார்.

அபுஜா விமான நிலையத்தில் பிரதமருக்கு அந்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

அந்நாட்டு அதிபர் திரு. **Bola Ahmed Tinubu** உடன் திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்துகிறார்.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்தப் பேச்சுகளில் இடம்பெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கிடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட உள்ளன.

பின்னர் இந்திய வம்சாவளியினர் பங்கேற்கும் நிகழ்ச்சியிலும் பிரதமர் பங்கேற்று அவர்களுடன் கலந்துரையாடுகிறார்.

நைஜீரியாவில் இருந்து நாளை பிரேசில் செல்லும் திரு. நரேந்திர மோடி, **Rio De Janeiro**-வில் நடைபெற உள்ள ஜி-20 உச்சிமாநாட்டிலும் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ள இதர உலக தலைவர்களுடனும் பிரதமர் பேச்சு நடத்துகிறார்.

பிரேசில் நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் திரு. நரேந்திர மோடி வரும் செவ்வாய்க்கிழமை கயானா புறப்பட்டுச் செல்கிறார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாகவும், ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாம் மற்றும் இறுதிக்கட்டமாகவும் வரும் 20ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி, காங்கிரஸ், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மகாராஷ்டிர மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

இந்த இரண்டு மாநில சட்டப்பேரவைத் தேர்தலிலும் பிஜேபி வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

சட்டமேதை பாரத ரத்னா அம்பேத்கருக்கு உரிய அங்கீகாரத்தை காங்கிரஸ் அளிக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பில் உள்ள மாநிலங்கள் நிறைவேற்றவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிருக்கு நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதாவை பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுதான் நிறைவேற்றியதாக அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் பிரிவினைவாத அரசியலில் ஈடுபடுவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டினார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, மகாராஷ்டிராவின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

அரசியல் சாசனம் மற்றும் இடதுக்கீட்டை பாதுகாப்பதற்காக காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் பாடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

தேசிய அளவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. ராகுல் காந்தி கேட்டுக்கொண்டார்.

ஜார்கண்டின் பல்வேறு இடங்களில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

இளையோர், மகளிர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு பிஜேபி அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக அவர் கூறினார்.

ஊடுருவல்களைத் தடுப்பதற்கும் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் மக்கள் நலனில் அக்கறையின்றி செயல்பட்டு வருவதாகவும் திரு. அமித் ஷா குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, **Shirdi** மற்றும் கோலாப்பூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

மகாராஷ்டிராவில் ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் பிஜேபி கூட்டணி அரசு தொழில்துறையின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

மாநில அரசுப் பணியிடங்களுக்கான காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்யும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் குறை கூறினார்.

வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வுகாண பிஜேபி தவறிவிட்டதாகவும் திருமதி பிரியங்கா காந்தி தெரிவித்தார்.

இதற்கிடையே தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியதாக பெறப்பட்ட புகார்கள் குறித்து விளக்கமளிக்குமாறு காங்கிரஸ் மற்றும் பிஜேபிக்கு தேர்தல் ஆணையம் தனித்தனியே நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பிஜேபி தலைவர் திரு. ஜேபி. நட்டா மற்றும் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கேவுக்கு இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மற்றும் ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தொடர்பாக பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாளை பிற்பகல் ஒரு மணிக்குள் இவ்விரு கட்சிகளும் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அந்த நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

விண்வெளித்துறையில் இந்தியா பல்வேறு சாதனைகளைப் படைத்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

ஜம்மு-கஷ்மீரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விண்வெளித்துறையில் தனியார் பங்களிப்பிற்கும் மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகக் கூறினார்.

புத்தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் 3 நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஷிம்லாவில் முதலமைச்சர் திரு. **Sukvindar Singh Sukhu** தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பொதுப்பணித்துறையில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்களுக்கான மதிப்பூதியத்தை 500 ரூபாய் உயர்த்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மருத்துவத்துறையில் காலியாக உள்ள 30 பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மணிப்பூரில் மாநில அமைச்சர்கள் 3 பேர் மற்றும் 6 சட்டப்பேரவை உறுப்பினர்களின் இல்லங்கள் மீது நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது.

வன்முறையாளர்கள் கூட்டமாக இந்தத் தாக்குதலை நடத்தியதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

நிலைமையை கட்டுப்படுத்துவற்காக காவல்துறை சார்பில் கண்ணீர்புகை குண்டுகள் வீசப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநிலம் முழுவதும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

5 மாவட்டங்களில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், 7 மாவட்டங்களில் இணையதள சேவையும் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

மத்திய ஆயுத காவல்படையினர், துணைநிலை ராணுவப் படையினர் கூடுதலாக பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் மணிப்பூர் அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

**Suriname** நாட்டிற்கு 475 மெட்ரிக் டன் உணவுப் பொருட்களை இந்தியா அனுப்பியுள்ளது.

சமூக நலத்திட்டத்தின்கீழ் இந்தியா இந்த உதவியை வழங்கியுள்ளதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

சீனாவில் கல்வி நிறுவனம் ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

**Yixing** நகரில் உள்ள கல்வி நிறுவனத்தில் பயின்ற ஒருவர் தமக்கு பட்டப்படிப்புகான சான்றிதழை வழங்காததற்காக கத்தியால் குத்தி இந்த தாக்குதல் சம்பவத்தை நடத்தியதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 7 பேர் உயரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

லெபனானின் **Khreibeh** பகுதியில் இஸ்ரேல் இந்த தாக்குதலை நடத்தியதாக லெபனான் அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இன்று காலை நிலவரப்படி நீர்வரத்து 11 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

பீஹாரின் **Rajgir-**ல் இப்போட்டி மாலை மணி 4.45க்கு தொடங்குகிறது.

-------------

தேசிய ஹாக்கி சாம்பியன் போட்டியில் ஒடிசா அணி பட்டம் வென்றது.

சென்னையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஒடிசா 5-1 என்ற கோல் கணக்கில் ஹரியானாவை வென்றது.

--------------

இந்தியா **Blitz** ஓபன் செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி – நார்வேயின் **Magnus Carlson**-ஐ வென்றார்.

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் பிரக்ஞானந்தா 2வது இடத்திலும், அர்ஜுன் எரிகைசி மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

-------------

பஹ்ரைன் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் கவின் தங்கம் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், 21-15, 21-19 என்ற செட் கணக்கில் ஈரானின் **Ali Hayati**-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Prakriti Bharath** 21-9, 20-22, 21-19 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Prerana Shet**-ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் **Annanya Pravin - Prerana Shet** இணை 21-14, 21-12 என்ற செட் கணக்கில் இலங்கையின் **Isuri Attanyaka – Sithumi De Silva** இணையை வென்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.

**<<<<The End>>>>**